## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டட்டினதும் (''கம்பனி'') மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினையும், பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்களினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (சி ம ந தொ இ நி அ த) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனி தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை கல்வி நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு நடைமுறைக் கணக்குகளுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 1,442,996 ஆன நேரடி வைப்பு நிதிக்கூற்றுக்களில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைக் கணக்குகள் இரண்டினது கூட்டுமொத்தம் ரூபா 1,442,996 ஆன நேரடி வைப்பு 2022 இன் நிதியாண்டின் ஆர்சீஎல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றினுள் நேரடி வைப்புக்கள் அடையாளப் படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செலுத்தப்பட வேண்டிய நீர்க்கட்டணம் ரூபா 2,926,801 ஆகும். எவ்வாறாயினும், இது தொடர்பாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் காலத்திற்கு காலம் விநியோகிக்கப்படுகின்ற விசேட நிராகரிப்பு இன்வொய்சின் அடிப்படையில் நீர் கட்டணத்தின் நிராகரிப்புத் தொகை செலுத்தப்படும். | செலவுகளை அடையாளப் படுத்தும் போது அட்டுறு அடிப்படை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் ஏனைய பதவியணியினரின் செலவுகள் முறையே ரூபா 901,200 உம் மற்றும் ரூபா 2,511,260 உம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனி உண்மையாக 12 மாத காலவரையறைக்குரிய முகவர் நிறுவன மேற்பார்வை போக்குவரத்து செலவுகள் கணக்குகளினுள் அடையாளங் கண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் இந்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். கொவிட் வரையறையின் காரணமாக பொருந்தாத உழைப்பை வேறுபடுத்தும் விளைவாக 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக வேறு பதவியணியினரின் செலவுகளை அறவிடுதல் வசதியற்றதாக காணப்பட்டது. | செலவுகளை அடையாளப் படுத்தும் போது அட்டுறு அடிப்படை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 28 ஊழியர்களின் சேவைக்காலம் குறைவாக மதிப்பிடப்பட்டமையால் மீளாய்வாண்டின் ஓய்வூதிய பலாபலனின் பொறுப்புக்கான ஒதுக்கீடு ரூபா 1,627,369 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. முறைமையின் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட பணிக்கொடை அறிக்கையில் மாதங்களின் அளவை கணக்கிடும் பிரச்சினையொன்று காணப்பட்டது. இந்த முறைமை விநியோகித்தருக்கு அறியப்படுத்தியதுடன் 2022 இல் இந்த குறைமதிப்பீடு / உயர் மதிப்பீடு சீர் செய்யப்படும். | உண்மையான சாதனங்கள் சரியாக மதிப்பிடப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் பல்வேறு பொருட்களின் பௌதீக மீதி மற்றும் பேரேட்டு மீதிகளுக்கிடையில் ரூபா 2,199,201 வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக புதிய இருப்பு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றைத் தயாரிப்பதற்கு முன்னர் அடையாளங் காணப்படாத வேறுபாடுகள் இணக்கம் மற்றும் சீர் செய்யப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 894,426,831 ஆக காணப்பட்டதுடன் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 648,483,238 ஆன 712 கடன்பட்டோருக்கு கடன்பட்டோர் உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2021 மே 04 ஆந் திகதியாகும் போது கடன்பட்டோர் பெறுமதி ரூபா 46,760,629 ஆன 47 கடன்பட்டோர் மாத்திரம் மறுமொழியளித்திருந்ததுடன் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 4,159,423 ஆன 08 கடன்பட்டோர் மீதியுடன் இணங்கியிருந்தனர். இதனிடையில வியாபாரக் கடன்பட்டோரில் கடன்பட்டோர் காலஎல்லை ஒரு வருடம் கடந்த பெறுமதி ரூபா 154,569,393 ஐ அறவிட்டிருக்கவில்லை. மேலும் பெறுமதி ரூபா 16,885,458 ஆன கடன்பட்டோர் 28 பேருக்கு அனுப்பப்பட்ட கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் கடிதம் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் இணங்கியதன் பிரகாரம் ஏஎன்சீஎல் இனால் ரூபா 200,000 இற்கு அதிகமான கடன்பட்டோருக்கு உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்படுகின்றது. எவ்வாறாயினும் கடன்பட்டோர் ஒரு சிலர் மாத்திரம் மறுமொழி அளித்திருந்ததுடன், இந்த நிலைமை எங்களுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. அனுப்பப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்திற்கான மறுமொழி (இணங்கி அல்லது இணங்காமல்) இல்லாமல் இருந்த போதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை மீதிகள் அநேகமானவை 2022 மே 30 ஆந் திகதியாகும் போது தீர்க்கப்பட்டிருந்தது.<br><br>கூட்டு மொத்தம் ரூபா 154,569,393 ஆன ஒரு வருடத்திற்கு அதிக காலம் செலுத்தப்படாத வியாபார கடன்பட்டோரின் கீழ் காட்டப்படுகின்ர மீதிகள் அறவிட முடியா கடனுக்கான ஏற்பாடுகளுக்காக வேறாக்கப்பட்டுள்ளது. | நிலவுகின்ற நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உரிய ஊழியர்கள் ஓய்வுபெறுதல், சேவையை நிறைவு செய்தல் அல்லது மரணம் காரணமாக கம்பனியை விட்டு நீங்கிய காரணத்தினால் 01 வருடத்திலிருந்து 20 வருடங்கள் வரையான அறவிடப்படாமல் உள்ள கூட்டு மொத்தம் ரூபா 7,193,905 மீதியும் ஊழியர்களில் பெறப்பட வேண்டிய நிலுவையாகக் காணப்படுகின்றது. | பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் ஊடாக இந்த கிடைக்கப் பெற வேண்டிய தொகையை குறைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் கம்பனிக்கு இந்த தொகையை இறுதிப் பணிக்கொடையில் குறைத்துக் கொள்ள முடியாது. எவ்வாறாயினும் கம்பனியினால் சேவையை நிறைவு செய்துள்ள ஊழியர்களுக்கு எஞ்சியுள்ளதை மீளச் செலுத்துமாறு குறிப்பிட்டு நினைவூட்டல் கடிதம் அனுப்புதல் மற்றும் குறித்த பிணையாளர்களின் மீள் செலுத்தப்படாத இடர்கடன் மீதிகளின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு தற்போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | கடன் விநியோகிக்கும் காலவரையறையின் போது கடனை மீள செலுத்தும் ஆற்றலுடன் அவர்களின் வயது மீள் செலுத்தும் மற்றும் வல்லமை தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கம்பனி, அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு கம்பனியின் வெளியீட்டிற்காக பங்களிப்பு செய்வதற்கு கம்பனி அனுமதி வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதியில் பங்களிப்பு கணக்கின் உள்ள நிலுவை மீதி ரூபா 19,961,081 ஆக காணப்பட்டது. அவற்றில் ரூபா 2,171,715 ஆன மீதி 01 வருடத்தில் இருந்து 10 வருடங்களுக்கு அதிக காலபகுதிக்காக நிலுவையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. | இதற்கு முன்னர் வாடிக்கையாளருக்கு கடனை பெற்றுக் கொடுப்பதற்கு முறையான சூத்திரமொன்று காணப்படவில்லை. அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் கடன் வசதியை பெறுவதற்கு தகைமையை பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், விற்பனை முறைமை நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் அரச பிரிவின் வாடிக்கையாளர்கள் மாத்திரம் கடனுக்கான தகைமையை பெற்றிருந்தனர். அரச பிரிவு வாடிக்கையாளர்களுக்கு கடனைப் பெற்றுக் கொடுக்கும் போதும் கூட மீள் செலுத்தும் முறைமை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் 03 மாதங்களுக்காக மாத்திரம் கடன் வசதிகள் பகிர்ந்தளிக்கப்படும். | இந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் | அதிகாரச் சட்டத்தின் 27(2ஏ) பிரிவின் பிரகாரம் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூபா 108,218,673 ஆன தாமதமான ஊழியர் சேமலாப கொடுப்பனவுக்கான மிகை கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்று மற்றும் பொருளாதார மற்றும் தொழிற்சாலைகளின் இறக்கத்தின் விளைவாக கம்பனியின் நிதி நிலைமை சீரற்ற நிலைமைக்கு மாறியிருத்தல் மற்றும் கம்பனியின் போக்கை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கம்பனியினால் கொடுப்பனவுகள் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அனைத்து நிலுவைக் கொடுப்பனவுகளும் பின்னர் செலுத்தப்பட்டது. | சுற்று நிருபத்தின் அறிவுரை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் 5.2.4 மற்றும் 5.2.5 பிரிவுகளின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக வரைவுப் பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 5.2.5 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்று இறுதி நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டு படிவத்தை வரைபு அமைச்சு, பொதுமுயற்சிகள் திணைக்களம், பொதுத்திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பணிப்பாளர் சபையினால் 2021 திசெம்பர் 22 ஆந் திகதி பாதிடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததை போன்று அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சுற்றுநிருபத்தின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் | நிதியமைச்சின் விடயப்பரப்பின் கீழ் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் வெளியீட்டு பத்திரத்தின் பிரகாரம் ஏஎன்சீஎல் அந்த திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டதல்ல. அதனால் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஏஎன்சீஎல் இற்கு உரித்தானதல்ல.<br><br>2022 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுப் பிரதி (வருமானங்கள் மற்றும் செலவினங்கள், மூலதனச் செலவுகள் பெறுகைகள் திட்டம் மற்றும் செய்திப்பத்திரிகை அச்சுப் பதிவு, தகடு மற்றும் மை பாதீடு) 2021 திசெம்பர் 09 ஆந் திகதி ஊடாக அமைச்சிற்கு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்று நிருபத்தின் அறிவுரை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு முன்மொழிவு முறைமைக்காக பணிப்பாளர் சபையின் அனுமதியொன்று மற்றும் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ/03 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபத்தின் 2.2 ஆம் பிரிவு | வரைபு அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதி அமைச்சின் இணக்கப்பாடின்றி, மீளாய்வாண்டிற்குள் தலைவருக்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு கூட்டுமொத்தம் ரூபா 24,423,308 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | 1973 இன் 28 ஆம் இலக்க எசோசியேட் நிவ்ஸ் பேபர்ஸ் சிலோன் லிமிட்டட் (விசேட ஏற்பாடு) சட்டரீதியாக ஏஎன்சீஎல் கட்டுப்பாட்டில் வருவதுடன் அதன் ஏற்பாட்டின் பிரகாரம் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு வியாபார மற்றும் அது தொடர்பான முகாமைத்துவ மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஏஎன்சீஎல் இற்காக 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ/03 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபம் பொருந்தாது என்பது எமது நம்பிக்கையாகும். | சுற்று நிருபத்தின் அறிவுரை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ/01 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபத்தின் 2 மற்றும் 3 ஆம் பிரிவு | திறைசேரியின் அங்கீகாரமின்றி கூட்டுமொத்தம் ரூபா 18,900,000 ஆன இரண்டு பஸ் வண்டிகள் மற்றும் வேன் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 1973 இன் 28 ஆம் இலக்க எசோசியேட் நிவ்ஸ் பேபர்ஸ் சிலோன் லிமிட்டட் (விசேட ஏற்பாடு) சட்டரீதியாக ஏஎன்சீஎல் கட்டுப்பாட்டில் வருவதுடன் அதன் ஏற்பாட்டின் பிரகாரம் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு வியாபார ற்றும் அது தொடர்பான முகாமைத்துவ மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஏஎன்சீஎல் இற்காக 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ/03 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபம் பொருந்தாது என்பது எமது நம்பிக்கையாகும். அதனால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்று நிருபத்தின் அறிவுரை பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் விளைவு ரூபா 332,012,000 இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் நட்டம் ரூபா 217,840,000 ஆகும். அதன்படி நிதி விளைவில் ரூபா 549,852,000 விருத்தியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திக்கு பிரதானமாக அரசினால் கிடைக்கப்பெற்ற நன்கொடை காரணமாயிருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் கம்பனியின் மொத்த இலாப விகிதம் மற்றும் புள்ளியிடப்பட்ட இலாபம் கம்பனியின் முன்னைய வருடத்திற்கு இணையான சதவீதம் முறையே 6.39 இனால் மற்றும் 31.62 வினால் அதிகரித்திருந்தது. புரள்வின் அடிப்படையில் நிர்வாகக் கிரயம் முன்னைய வருடத்திற்கு இணையாக 6.73 சதவீதத்தில் குறைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு நிறைவடையும் போது கூட்டு மொத்தம் ரூபா 31,370,320 பெறுமதியான 350 காசோலைகள் மதிப்பிழந்து காணப்பட்டது. அதில் ரூபா 2,155,046 பெறுமதியான 69 காசோலைகள் மற்றும் ரூபா 1,478,779 பெறுமதியான 10 காசோலைகளும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் முறையே 5 வருடங்கள் மற்றும் 25 வருடங்களை விட அதிக காலம் செலவிடப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. கடன் கட்டுப்பாடு மற்றும் மீள் சாதனை நடவடிக்கை மூலம் கடினப்படுத்துவதன் ஊடாக மதிப்பிழந்த காசோலைகளை குறைத்துக் கொள்ளுதல் மற்றும் எப்போதும் குறித்த செயன்முறையை பேணுவதன் மூலம் மதிப்பிழந்த காசோலைகளின் மூலம் உருவாகும் நிலுவை மீதியை அறவிடுவதற்குரிய செயற்பாட்டில் நாம் ஈடுபடுகின்றோம். | காணப்படுகின்ற முறைமையை முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2008 திசெம்பர் மாதத்திலே வரையறுக்கப்பட்ட லங்கா புவத் கம்பனி இலங்கை தேசிய பத்திரிகை முகவர் நிறுவனத்திற்கு 1200 பங்குகளை கொள்வனவு செய்வதற்காக கம்பனியினால் ரூபா 1,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியாகியும் எவ்வித பிரதிபலனொன்றும் கிடைத்திருக்கவில்லை. மேலும் 2017 ஆம் ஆண்டிலே வரையறுக்கப்பட்ட லங்கா புகத் கம்பனிக்கு சம்பந்தமான இரண்டு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 2,194,637 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போதும் அறவிடப்படாமல் | குறித்துக் கொள்ளப்பட்டது. பணிப்பாளர் சபை தீர்மானம் எல்.கே.பீ.பீ 202.17 அடிப்படையாக வைத்து ஏஎன்சீஎல், லங்கா புவத் கம்பனியின் 1200 பங்குகளில் முதலிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிலே இரண்டு ஊழியர்கள் அப்பொழுதே விலகியிருந்ததுடன் ஒரு ஊழியர் ஏஎன்சீஎல், ஊழியர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. புதிய வர்த்தமானி அறிவித்தலில் (2020 ஆகஸ்ட் 10) இந்த நிறுவனம் ஊடாக அமைச்சின் கீழ் வர்த்தமானியில் | வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப் பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | அறவிடப்படாமல் கடன்பட்டோர் காலஎல்லை 2 வருடங்களை விஞ்சிய கூட்டுமொத்தம் ரூபா 24,434,086 ஆன கடனை அறவிடுவதற்கு முகாமைத்துவம் முறையான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் விற்பனைப் பிரிவின் ரூபா 24.434,086 ஆன அறவிட முடியாத கடன்பட்டோரை அறவிட முடியா கடனாக வெட்டி நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 1985 ஆம் ஆண்டிலே ஆதன அபிவிருத்தி வியாபாரத்தில் ஈடுபடுத்துவதற்காக லேக்ஹவுஸ் ப்ராபர்டி டிவலெப்மென்ட் (தனியார்) கம்பனி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 மே ஆகும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் காசுப்பாய்ச்சல் ஏற்பட்டிருக்கவில்லை. | 1985 ஆம் ஆண்டு தொடக்கம் லேக் ஹவுஸ் ப்ரபர்ட்டி டிவலப்மென்ட் (தனியார்) கம்பனி செயற்பாட்டு நடைமுறைகளற்ற கம்பனியாகும். | செயலிழந்துள்ள நிறுவனம் தொடர்பாக தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 1981 ஒக்டோபர் 14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் 162/5 ஆம் இலக்க "பத்திரிகையாளர்களுக்கான பாரம்பரிய குறியீடுகள் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது கம்பனிக்கு எதிராக 15 அவதூறு வழக்குகள் தாக்கல் யெய்யப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது கம்பனிக்கு எதிராக வார இறுதி செய்திப்பத்திரிகையான "சிலுமின" செய்திப் பத்திரிகையில் 2007 நவம்பர் 18 ஆந் திகதி வெளிவந்த கட்டுரை சம்பந்தமாக வாதியினால் கம்பனியிடமிருந்து 500 மில்லியன் நட்டஈடு கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கு 2010 ஆம் ஆண்டிலே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கூட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதிவாதி மற்றும் கம்பனிக்காக தோற்றுகின்ற வழக்கறிஞர் நீதிமன்றத்தின் உரிய அறைக்கு சமூகமளித்திருக்கவில்லை. அதனால் வழக்குத் தீர்ப்பு வாதிக்கு சாதகமாக பெற்றுக் கொடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. இந்த தீர்ப்புக்கு எதிராக கம்பனி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மற்றும் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் தொடுக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த இரண்டு மேன்முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டிருந்தது. | கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அந்த வழக்கின் நடவடிக்கைகள் பரிசோதிக்கப்படும் போது 2010 ஒக்தோபர் 20 ஆந் திகதி மாவட்ட நீதிமன்றத்தின் 3 ஆம் இலக்கத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டதுடன் பிரதிவாதித் தரப்பின் வழக்கறிஞர் 1 ஆம் இலக்க மாவட்ட நீதிமன்றத்தில் இருந்ததுடன் அது ஏக தரப்பினர் வழக்கு விசாரணையாக நியமிக்கப்பட்டிருந்தது.<br><br>பிரதிவாதி சார்பாக தோற்றாததுடன் பிரதிவாதிக்கு (ஏஎன்சீஎல்) எதிராக ஏக தரப்பின் வழக்கு விசாரணையாக நியமிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு 2010 ஒக்தோபர் 20 ஆந் திகதி விசாரணைக்கு எடுக்க இருந்தது. 2010 செப்தெம்பர் 30 ஆந் திகதி வாதியின் பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞரால் வாதி வெளிநாடு சென்றிருப்பதாகவும் 2010 ஒக்தோபர் 20 ஆந் திகதி சமூகந்தர முடியாதுள்ளதாக மோசம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்படுகின்ற அவதூறு வழங்குகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பின்னர், 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அவர்கள் தீர்மான இலக்கம் எப் 104.19 ஊடாக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கு மற்றும் கம்பனிக்காக தோன்றுவதற்கு சிரேஷ்ட சனாதிபதி வழக்கறிஞர் ஒருவரும் அவரின் உதவியாளரையும் தெரிவு செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அவர்களின் முழுமையான சட்ட கட்டணமாக ரூபா 18,230,000 தொகை 2019 ஒக்டோபர் 09 ஆந் திகதி செலுத்தப்பட்டதுடன் இந்த வழக்கிற்காக தவறான நீதிமன்ற அறைக்கு சமூகம்தந்த வழக்கறிஞராலேயே பணிப்பாளர் சபைக்கு உரிய சிரேஷ்ட சட்டத்தரணி வழக்கறிஞரை தெரிவு செய்வதற்கு வழிவகுக்கப்பட்டிருந்தது. மேலும் வழக்கறிஞர் 2020 ஏப்ரல் 08 ஆந் திகதி ஓய்வுபெற்றிருந்ததுடன், பின்னர் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் 2020 மே 15 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தருக்கு எதிராக இதுவரை எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், இந்த வழக்கு 3 ஆம் இலக்க மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ளதுடன் அங்கு வாதிக்கு நீதிமன்றத்திற்கு சமூகந் தரமுடியாதுள்ளதை மோசம் ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தாமல் வாதியின் பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞரால் பிரதிவாதி தரப்பின் வழக்கறிஞர் சமூகந்தராததை பிரயோசனப்படுத்தி ஏகதரப்பின் வழக்குத் தீர்ப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏகதரப்பு கட்டளையின் பின்னர் பிரதிவாதிக்காக நியாயமான காரணங்கள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த பரீட்சனையின் போது கம்பனியின் செயலாளர், கம்பனிக்கு அறிவுரை வழங்கும் வழக்கறிஞரும் ஆலோசகரும் வழக்கு தொடர்பாக சாட்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தம் மேன்மைதங்கிய மேலதிக மாவட்ட நீதிபதி ஏகதரப்பு கட்டளையிலிருந்து நீங்குவதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏகதரப்பு கட்டளையை நீக்குவதற்காக சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அந்த மேன்முறையீடும் சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தினால் மறுக்கப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்க உதவியை எதிர்பார்த்து இந்த வழக்கு தற்போது உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கு இருக்கின்றது.

இந்த வழக்கு இறுதி நிலைக்கு அண்மிக்கவில்லை என்பதுடன் மற்றும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரித்தல் முடியும்வரைக்கும் மாவட்ட நீதிமன்றம் பெற்றுக் கொடுத்த

| | | | |
|---|---|---|---|
| | | ஒரு பக்கசார்பான கட்டளையை நடைமுறைப்படுத்த முடியாது. அதனால் ஏஎன்சீஎல் இனால் கம்பனி வழக்கறிஞருக்கு தொழில்ரீதியான கவனக் குறைவின் அடிப்படையில் ஒழுக்காற்று பரிசீலனையை நடாத்துதல் தொடர்பான தீர்மானம் மேற்கொள்வதற்கு நான் தவறியிருந்தேன்.<br><br>2020 மே 15 இல் இருந்து 2020 நவம்பர் 14 வரை ஒப்பந்த அடிப்படையில் அவரின் சேவையை மேலும் 6 மாதங்களுக்கு நீடித்து சேவை நீடிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு நேர்ந்தது. 2020 மார்ச் 11 ஆந் திகதியிலிருந்து கொவிட் 19 பரவியதன் பின்னர் காணப்பட்ட நிலைமையின் கீழ் குறித்த அனைத்து ஆவணங்கள் தொடர்பாக மிகவும் சமீபமான ஒரே உத்தியோகத்தர் அவர் என்ற படியாலாகும். எவ்வாறாயினும், அந்த நீடிப்புக்காலம் நிறைவடைந்த பின்னர் அவருக்கு மேலும் சேவை நீடிப்பொன்று பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா 1,086,000 ஆன டென்டர் வைப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியிலும் மீளளிக்கப்படாமல் காணப்பட்டது. | 2018 மற்றும் 2019 ஆம் கால எல்லையின் போது ஏஎன்சீஎல், டென்டர் வைப்பாக ரூபா 1,086,000 பல்வேறு வழங்குனர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த வைப்பை மீண்டும் செலுத்துவதற்காக அந்த வழங்குனர்கள் மூலம் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்காததன் காரணமாக மீதி இதுவரையும் பேரேட்டினுள் காணப்படுகின்றது. | எஞ்சியுள்ள மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | கம்பனியின் செய்தி பத்திரிகை விற்பனை முகவர் ஒப்பந்தத்தின் பிரகாரம், முகவரின் இழிவு மட்ட வைப்பு 7 வாரங்களுக்குள் செய்தி பத்திரிகை முகவர் ஒருவருக்கு கிடைக்கும் செய்தி பத்திரிகையின் அளவின் பெறுமதிக்கு சமமானதாகும். எவ்வாறாயினும், 2021 யூன் 30 ஆம் திகதியில் ரூபா 1,563,699 தொகை மொத்த கடன் பெற்றுக்கொண்ட 24 | குறித்த பட்டியலுக்கு ஆர். எஸ்.ஈ.எஸ் இன் விருத்தி செய்த நிறுவனம், கிளை அலுவலகம் ஆகியன உள்ளடங்கும். இந்த செய்தி முகவர் நிலையம் நியமிக்கப்பட்டிருப்பது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கமைவாக என்பதுடன் அவர்களிடம் வைப்பு பணம் கேட்கப்பட மாட்டாது. | செய்தி பத்திரிகை விற்பனை முகவர் ஒப்பந்தத்தின் பிரகாரம், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு முகவர்களிடமிருந்து வைப்புக்கள் பெறப்பட்டிருக்க வில்லை. | எவ்வாறாயினும், கிளை அலுவலகங்களின் கடன் கட்டுப்பாடு எங்களுடைய விடயப்பரப்பின் கீழ் காணப்படுவதில்லை. கிளை அலுவலகங்களுக்கு இணைந்த தெரு வியாபாரிகளுக்கு கடன் வழங்குதல் கிளை முகாமையாளர்களால் நேரடியாக மேற்கொள்ளப் படுகின்றது. | |

### 3.2 செயற்பாட்டு பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் பொது மக்களுக்கு மற்றும் பல்வேறு தொகுதியினருக்கு இலவசமாக வெளியீட்டு பிரதிகள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்குள் பிரதான செய்தி பத்திரிகை 7ன் 1,154,607 பிரதிகள் மற்றும் 14 வார சஞ்சிகைகளின் 87,898 பிரதிகள் இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. அச்சிப் பிரதிகளுக்கிடையில் கூடுதலான இலவச பிரதிகளின் அளவு வழங்கப்பட்டிருப்பது நூற்றுக்கு 22 சதவீத்தை பிரதிப்படுத்தும் ''தினமின'' செய்திப த்திரிகை ஆகும். இந்த இலவச பிரதிகளுக்காக செலவான தொகை ரூபா 84,383,996 ஆகும். | நிறுவனத்தின் பதவியணியினருக்கு இலவசமாக பிரதிகள் வழங்காமல் இருப்பதற்கான தீர்மானங்கள் தற்போதே மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலவசமாக வெளியீட்டுப் பிரதிகளை பெற்றுக் கொள்ளும் அனைத்து தரப்பினர்களினதும் உரிய நேரத்தில் நாளதுவரையாக்கப் படுவதற்கு மற்றும் குறைத்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறை உபயோகமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஹோகந்தர பிரதேசத்தின் மீண்டும் மதிப்பிடப்பட்ட ரூபா 733,000,000 தொகை 8 ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்ட காணி 1985 ஆம் ஆண்டு தொடக்கம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2013 ஆம் ஆண்டிலே லேக்ஹவுஸ் ப்ரபர்ட்டி டிவலப்மென்ட் கம்பனியின் ஹோகந்தர காணியின் உரிமத்தை ஏஎன்சீஎல் க்கு வழங்கப்பட்டுள்ளதுடன் வீஆர்எஸ் மற்றும் விடய மூலதனத் தேவைப்பாட்டிற்காக 2016 ஆம் ஆண்டிலே கொமர்சல் வங்கியில் கடன் பெற்றுக் கொள்வதற்காக அடகு வைக்கப்பட்டுள்ளது. | கம்பனி தங்களுடைய சொத்துக்களின் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 3.4 வேறு அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நவம்பர் 26 ஆந் திகதி ஊடக அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி 2020 திசெம்பர் 07 ஆம் திகதி சுயாதீன ஆலோசகரொருவர் கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஆலோசகர் 2020 திசெம்பர் 08 ஆம் திகதி ஊடக அமைச்சரின் பதவியணியிலும் 2021 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சுகாதார அமைச்சரின் பதவியணியிலும் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனிக்கு எவ்வித சேவையினையும் பெற்றுக் கொள்ளாமல் ஆலோசனைக் கட்டணமாக ரூபா 1,800,000 தொகையொன்று கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது. | 2020 நவம்பர் 26 ஆந் திகதி ஊடக மற்றும் தகவல்கள் அமைச்சரினால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் திரு சமீர கமகே ஆலோசகராக கம்பனிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். 2020 திசெம்பர் 08 ஆந் திகதியாகும் போது அப்போதைய ஊடக மற்றும் தகவல் அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் (அப்போதைய அமைச்சர்) 2020 திசெம்பர் 07 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் சம்பளம் செலுத்துகின்ற அடிப்படையில் ஊடக மற்றும் தகவல்கள் அமைச்சிற்கு திரு.சமீர கமகேவை எங்களுடைய பதவியின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டது. அப்போதைய சுகாதார அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் 2021 ஆகஸ்ட் 17 ஆந் திகதி திரு சமீர கமகே 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அமைச்சிற்கு விநியோகிக்கப்படும் சம்பள அடிப்படையில் மீண்டும் எங்களுடைய சுகாதார மத்திய நிலையத்திற்கு வருகை தந்திருந்தார். | கம்பனி தமது பதவியணியினருக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவுகளை செலுத்துகின்ற அடிப்படையில் வேறு நிறுவனங்களுக்கு சேவையிலிருந்து விடுவிக்காமல் இருக்க வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மே 23 ஆந் திகதி வரையும், 2017 யூன் 06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கான அனுமதி பெற்றிருக்காததுடன் பதவியணியினரின் பிரகாரம், பொது மற்றும் பதிப்பாசிரியர் அலகுப் | 2017 யூன் 6 ஆந் திகதி ஊழியர்களின் எண்ணிக்கையின் பிரகாரம் பொது நிர்வாகம் மற்றும் ஆசிரிய நிர்வாகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் பதவியணியினர் முறையே 658 மற்றும் 327 ஆகும். எவ்வாறாயினும், பொது மற்றும் பதிப்பாசிரியர் பிரிவின் உண்மையான பதவியணியினர் முறையே 875 மற்றும் 423 ஆகும். அதனடிப்படையில் மேலதிக பதவியணியினர் 313 ஆகும். மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் 407 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் காணப்பட்டவர்களாவர். ஊழியர் கிரயம், மீளாய்வாண்டு மற்றும் சென்ற வருடத்தின் வருமானத்தின் சதவீதமாக முறையே நூற்றுக்கு 52 மற்றும் நூற்றுக்கு 62 ஆக காணப்பட்டது. | முறையே 658 மற்றும் 327 ஆகும். லேக் ஹவுஸ் நிறுவனத்திற்காக தயாரிக்கப்பட்ட உபாயவழியான திட்டத்தினாலான அடிப்படையில் மற்றும் சுய செயற்பாடுகளின் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள அல்லது செயற்படுத்தப்பட்டு வருகின்ற கட்டமைப்பின் (ஈஆர்பீ, விற்பனைகள், தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு, வலையமைப்பு வகுப்பிடல், எச்ஆர்ஐஎஸ் கட்டமைப்பு ஆகிய) உருவாகின்ற வினைத்திறனைக் கவனத்திற் கொண்டு இந்த ஊழியர் எண்ணிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் நிறுவனத்திற்கு புதிய நியமனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நேர்ந்துள்ளது. தற்போது கம்பனியினுள் 1,180 ஊழியர்கள் காணப்படுகின்றனர். திருத்தப்பட்ட ஊழியர் எண்ணிக்கையொன்று ஏஎன்சீஎல் இற்குள் காணப்படுவதுடன் அது அனுமதிக்காக அமைச்சிற்கு அனுப்பப்படும். | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 2,250,000 செலுத்தி தயாரிக்கப்பட்டிருந்த திறமைகளை கைப்பற்றிக்கொள்ளல், பதவியுயர்வு, விடுமுறைக் கொள்கை, செயலாற்றல் முகாமைத்துவம் போன்ற ஏழு கொள்கைகள் கம்பனியினால் பாவனைக்குட்படுத்தப்படுகின்ற போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது, செயலாற்றல் முகாமைத்துவக் கொள்கை மாத்திரமேயாகும். | ஆலோசகரொருவரின் ஆலோசனையுடன் ஏழு கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனுள் செயலாற்றல் முகாமைத்துவக் கொள்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய கொள்கைகள் அனுமதிக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அனைத்து கொள்கைகளும் பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும். |